28.10.2025

O.S.No. 246/2022

PW2–பாலமுருகன் – த/பெ. கனகராஜ்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 28.10.2025

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதி தரப்பில்)

1. நீதிமன்ற உத்தரவின்படி நீதிமன்ற ஆணையருக்கு உதவியாக தாவா இடத்தை நான் அளந்து கொடுத்தேன் என்றால் சரிதான். ஆணையர் என்னிடம் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை காண்பித்தார் என்றால் சரிதான். நீதிமன்ற உத்தரவின்படி கல்லூரணி கிராமம், புல எண்.523/8 என்ற எண் கொண்ட இடத்தை ஸ்தல பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. தற்போது புல எண்.523/8 என்ற இடம் ஸ்தலத்தில் கிடையாது, பல உட்பிரிவுகளாக உள்ளது என்றால் சரிதான். ஆணையர் உத்தரவிலோ, மனுவிலோ உட்பிரிவு பற்றி எதுவும் துலங்காது என்றால் சரிதான். உத்தரவில் துலங்காத இடங்களை அளந்தது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல, உத்தரவில் நான்குமால் மற்றும் நீள, அகலங்கள் குறிப்பிடப்பட்டிருந்தது. நான்குமால் மற்றும் விஸ்தீரணத்தை வைத்து மட்டும் கொண்டு அளக்க முடியுமா என்றால் முடியாது, ஆனால் உட்பிரிவு செய்வதற்கு முன்புள்ள புல எண் இருந்ததால் ஸ்தல பார்வை செய்தேன்.

3. எனக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ய எந்த அதிகாரமும் இல்லை என்றால் சரிதான். ஆணையர் உத்தரவிலும் கிடையாது என்றால் சரிதான். நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக ஸ்லத்தை அளவீடு செய்வதற்கு

எந்த அதிகாரமும் கிடையாது என்றாலும், அதன் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதற்கு எந்த அதிகாரமும் கிடையாது என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.